| | 822 | **பொருள் எண்-29**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தெருவிளக்குகளை பராமரிக்கத்தேவையான மின்சாதனப்பொருட்கள் இருப்பில் இல்லாத காரணத்தினால் தெருவிளக்குகளை சரிவர பராமரிக்க முடியவில்லை. மேலும் நாடாளுமன்ற தேர்தல் 2014 ஐ முன்னிட்டு தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினாலும் மின் உபகரணங்கள் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரமுடிய வில்லை. நகராட்சி பொதுமக்களின் புகார் காரணமாகவும் தெருவிளக்குப் பணியின் அவசர அவசியம் கருதி அவசரக்கால பணிக்காக கீழ்க்கண்ட மின் உபகரணங்கள் மட்டும் ஏற்கனவே நகராட்சிக்கு தெருவிளக்கு மின் உபகரணங்கள் சப்ளை செய்து வரும் வேல்முருகன் ஏஜென்சி,நாகர்கோவில் என்ற நிறுவனத்தினடமிருந்து வாங்கப்பட்டது.<br><br>1. 40 வாட் குழல் விளக்கு சோக் - 50 எண்ணம்<br>2. 1/18 வயர் காயில் - 3 எண்ணம்<br>3. 250 சோடியம் இக்னேட்டர் - 5 எண்ணம்<br>4. 36 வாட் சி.எப்.எல். ஹோல்டர் - 50 எண்ணம்<br>5. 40 வாட் குழல் விளக்கு பிட்டிங்ஸ் - 3 எண்ணம்<br><br>மேற்கண்ட மின் உபகரணங்களுக்குரிய பட்டியல் தொகை ரூ. 25050/- ஐ (ஏற்கனவே நகர்மன்றத்தால் அங்கிகரிக்கப்பட்ட விலையின்படி) பொருட்கள் சப்ளை செய்த வேல்முருகன் ஏஜென்சி,நாகர்கோவில் என்ற நிறுவனத்திற்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | 823 | **பொருள் எண்-30**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளையும் வர்ணம் பூசி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.8.00இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 824 | **பொருள் எண்-31**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தெருவிளக்குகளை பராமரிக்கத்தேவையான மின் உதிரி பொருட்கள் இருப்பில் இல்லாத காரணத்தினால் தெருவிளக்குகளை சரிவர பாராமரிக்க இயலவில்லை.இதனால் தெருவிளக்குகளை பராமரிக்கத்தேவையான மின்சாதனப்பொருட்களை வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 825 | **பொருள் எண்-32**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தமிழக முதலமைச்சர் அவர்களின் அம்மா உணவகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தி 02.06.2014 அன்று வரப்பெற்ற மின்னஞ்சல் செய்திப்படி நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தில் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி ,மண்டல செயற்பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரைப்படி தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.22.00இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 826 | **பொருள் எண்-33**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொறியாளர் பிரிவிற்கு தனியாக புதிய கனிப்பொறி ஒன்று வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.715 நாள்:13.01.14 படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி பொறியாளர் பிரிவுக்கு கனிப்பொறி ஒன்று புதியதாக வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 45,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 827 | **பொருள் எண்-34**<br>வருவாய்த்துறையின் மூலம் பெறப்படும் அனைத்து சான்றிதழ்களையும் ஆன்லைனில் காயல்பட்டணத்தில் பெற்றுக் கொள்ள ஏதுவாக அலுவலகம் அமைப்பதற்கு நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள பழைய நகராட்சி கட்டிடத்தை புதுப்பிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது.அதில் பயன்படுத்துவதற்கு கனிப்பொறி -2 எண்ணம்,பிரிண்டர்-1எண்ணம், ஸ்கேனர் - 1 எண்ணம்,வெப்கேமிரா – 1 எண்ணம் மற்றும் UPS – 2 எண்ணம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 98000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 828 | **பொருள் எண்-35**<br>காயல்பட்டணம் நகராட்சியில் திறந்த வெளியில் கழிப்பிடம் கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டத்தில் கீழ லட்சுமிபுரத்தில் புதியதாக கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.7.20இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகர்மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.தற்பொழுது அங்கு கட்டுவதற்கு பொதுமக்களின் எதிர்ப்பு உள்ள காரணத்தினால் அங்கு அனுமதிக்கப்பட்ட பணியினை 1-வது வார்டுக்குட்பட்ட அருணாச்சலபுரத்தில் அதே மதிப்பீட்டுத்தொகைக்கு மாற்றி செய்வதற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 829 | **பொருள் எண்-36**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றி வரும் திரு.வெ.ராதாகிருஷ்ணன், ஓட்டுநர் இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் **T.N.69.Y0603** கார்கோ மினிலாரி தகுதிச் சான்று ஏப்ரல் 2013 உடன் முடிவடைவதால் 2014-15ம் ஆண்டுக்கான தகுதிச் சான்று பொறுவதற்கு தேவையான கீழ்க் கண்ட பழுது நீக்கப் பணிகள் செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அன்னார் தனது விண்ணப்பத்துடன் மூன்று பணிமனைகளின் விலைப்புள்ளிகளையும் இணைத்துள்ளார்.<br><br>1. டிப்பர் ஜாக்கி பழுது பார்த்தல்.<br>2. உறாரன் டியூப் புதியது பொருத்துதல்.<br>3 டிப்பர் சுவிட்ச் புதியது பொருத்துதல்.<br>4. டயர் ஆறு எண்ணம் புதியது பொருத்துதல்.<br>5. வாகனம் முழுவதும் பெயிண்ட் அடித்து எழுத்துக்கள் எழுதுதல்.<br>6. எலக்ட்ரிக்கல் வேலை பார்த்தல்.<br>7. பிரேக் செக்கப் செய்தல்.<br>மேற்காணும் பழுது நீக்கப் பணிகள் செய்வதற்கு உத்தேச செலவு தொகை ரூ.28000/-ஆகும் எனவும் தெரிவித்துள்ளார். எனவே மேற்காணும் பழுது நீக்கப்ப பணிகளை செய்வதற்கும், கனரக வாகனங்களுக்கு அரசு நிர்ணயம் செய்த செலவு தொகை ரூ.18000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 830 | **பொருள் எண்-37**<br><br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றி வரும் திரு.வெ.ராதாகிருஷ்ணன், ஓட்டுநர் இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் **T.N.69.S0761** ஆட்டோவிற்கு தகுதிச் சான்று ஆகஸ்ட் 2013 உடன் முடிவடைவதால் 2014-15ம் ஆண்டுக்கான தகுதிச் சான்று பொறுவதற்கு தேவையான கீழ்க் கண்ட பழுது நீக்கப் பணிகள் செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அன்னார் தனது விண்ணப்பத்துடன் மூன்று பணிமனைகளின் விலைப்புள்ளிகளையும் இணைத்துள்ளார்.<br><br>1. நான்கு வீல் கரீஸ் பேக்கிங் செய்தல்.<br>2. ரியர் டோர் பழுது பார்த்தல்.<br>3 இன்ஜின் ஆயில் மற்றும் கியர் ஆயில் மாற்றம் செய்தல்.<br>4. கிளட்ச் பழுது பார்த்தல்.<br>5. எலக்ட்ரிக்கல் மற்றும் வயரிங் வேலை பார்த்தல்.<br>6. வாகனம் முழுவதும் பெயிண்ட் அடித்து எழுத்துக்கள் எழுதுதல்.<br><br>மேற்காணும் பழுது நீக்கப் பணிகள் செய்வதற்கு உத்தேச செலவு தொகை ரூ.45,000/-ஆகும் எனவும் தெரிவித்துள்ளார். எனவே மேற்காணும் பழுது நீக்கப்ப பணிகளை செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகைக்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :1. மன்றம் அனுமதியளிக்கலாம்.<br><br>2. அரசு நிர்ணயம் செய்த தொகையை விடக் கூடுதலான செலவு தொகைக்கு அரசின் பின்னேற்பு பெறுவதற்கும் மன்றம் அனுமதியளிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 831 | **பொருள் எண்-38**<br><br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றி வரும் திரு.வெ.ராதாகிருஷ்ணன், ஓட்டுநர் இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் **T.N.69.YU6922** கார்கோ மினிலாரி தகுதிச் சான்று மே 2013 உடன் முடிவடைவதால் 2014-15ம் ஆண்டுக்கான தகுதிச் சான்று பொறுவதற்கு தேவையான கீழ்க் கண்ட பழுது நீக்கப் பணிகள் செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அன்னார் தனது விண்ணப்பத்துடன் மூன்று பணிமனைகளின் விலைப்புள்ளிகளையும் இணைத்துள்ளார்.<br>1. வாகனம் முழுவதும் பெயிண்ட் அடித்து எழுத்துக்கள் எழுதுதல்.<br>2. எலக்ட்ரிக்கல் மற்றும் வயரிங் வேலை பார்த்தல்.<br>3 டிங்கர் வேலை பார்த்தல்<br>4. டிப்பர் பம்பு ஆயில் லீக் சரி பார்த்தல்.<br><br>மேற்காணும் பழுது நீக்கப் பணிகள் செய்வதற்கு உத்தேச செலவு தொகை ரூ.25000/-ஆகும் எனவும் தெரிவித்துள்ளார். மேற்காணும் பழுது நீக்கப்ப பணிகளை செய்வதற்கும், கனரக வாகனங்களுக்கு அரசு நிர்ணயம் செய்த செலவு தொகை ரூ.18000/-க்கும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 832 | **பொருள் எண்-39**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதிகள் கடற்கரைப் பகுதியாக இருப்பதாலும், கடந்த ஒருவார காலமாக பருவமழை மாரி பெய்ததாலும், ஆங்காங்கே டெங்கு காய்ச்சல் அறிகுறி இருப்தாக தெரிய வருகிறது.<br>பார்வை 2ல் காணும் சென்னை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர், பார்வை 3ல் காணும் அரசு செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலப் பணிகள் துறை சென்னை, பார்வை 4ல் காணும் துணை இயக்குநர், நலப் பணிகள், தூத்துக்குடி ஆகியோரின் கடிதங்களில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படியும் பார்வை 5ல் காணும் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின் படியும், இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக வீடு வீடாகச் சென்று அபேட் மருந்து ஊற்றும் பணிக்கு பார்வை 1ல் காணும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அட்டவணையின் அடிப்படையில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 165 வீதம் 10 தினக்கூலிப் பணியாளர்களை பணிக்கு அமர்த்திக் கொள்ளவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1,50,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | |
| | 833 | **பொருள் எண்-40**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் 4 குப்பைக் கழிவுகளை சுமந்து செல்லும் வாகனங்களும், பொது பிரிவில் ஒரு ஈர்ப்பும் சேர்த்து மொத்தம் 5 வாகனங்கள் இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. ஆனால் 5 வாகனங்களுக்கும் சேர்த்து துப்புரவுப்பணி மேற்பார்வையாளராகப் பணி புரிந்து கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்த காரணத்தினால் பதவி உயர்வு பெற்ற ஒரு ஓட்டுநர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்.<br>எனவே ஓட்டுநர் பற்றாக்குறையினைக் கருத்தில் கொண்டு பொது சுகாதார பணிகளின் நலன் கருதி கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்ற துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மீதமுள்ள வாகனங்கள் இயக்கப்பட்டு வரப்படுகிறது. இதனால் நகரின் பொது சுகாதார பணிகள் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, பொது மக்கள் மத்தியில் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் சூல்நிலை உருவாகியுள்ளது.<br>மேலும் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 19 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இந்நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளையும் பராமரிக்க ஒரு காவலரே உள்ளதால் நகரின் குடிநீர் விநியோகப் பணிகளும் வெகுவாகப் | மன்றம் அனுமதி வழங்குகிறது. மேலும் காயல்பட்டணம் நகராட்சியில் எலெக்ட்ரீசியன் பணியிடம் உருவாக்கப்படவில்லைய ாதலால் எலெக்ட்ரீசியன் -1 ம் டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் |

| | | | |
|---|---|---|---|
| | | பாதிப்படைகிறது.<br><br>எனவே நிர்வாக நலன் கருதியும், குடிநீர் விநியோகம் மற்றும் பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி, பொது சுகாதாரத்தினைப் பேணிகாக்கும் பொருட்டு 4 ஓட்டுநர்கள் மற்றும் 2 காவலர்களை டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்ளவும், அதற்காகும் ஓராண்டு உத்தேச செலவு தொகை ரூ.9,80,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரியும், மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | செய்யவும் மன்றம் அனுமதி வழங்குகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | 834 | **பொருள் எண்-41**<br>இந்நகராட்சி அனைத்துப் பிரிவுகளிலும் பணி புரிந்து வரும் பணியாளர்களில் சீருடை மற்றும் காலணிகள் பெறத் தகுதியுடைய பணியாளர்களுக்கு 2014-15ம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சீருடை, அதற்கான தையல் கூலி மற்றும் காலணிகள் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,20,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரியும், மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 835 | **பொருள் எண்-42**<br>இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் இயற்கைச் சீற்றம் மற்றும் காலம் மாரிப் பெய்யும் பருவமழை ஆகியவற்றால் நோய்கள் பரவுவதை தடுப்பதற்கு பொது சுகாதார பிரிவில் பொது சுகாதார பணிகளுக்கு அன்றாடம் தேவைப்படும் கிருமி | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | நாசினிகளான சுண்ணாம்புத்துாள், பிணாயில் மற்றும் பிளீச்சிங் பவுடம் ஆகியவற்றை 2014-15ம் ஆண்டுக்கு கொள்முதல் செய்து கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரியும், மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | |
| | 836 | **பொருள் எண்-43**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மாதம்தோறும் 2 சோப்புக் கட்டிகள் வீதம் 2014-15ம் ஆண்டுக்கு வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 837 | **பொருள் எண்-44**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு 2014-15ம் ஆண்டுக்கு தேவையான கீழ்க் காணும் பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்க வேண்டியுள்ளது.<br>1. Reflight Jacket 58 Ns<br>2. Cumboot 28 Set<br>3. Hamd clous 58 Set<br>4. Mask 58 Ns<br>5. Cap 58 Ns | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | 6. Rain Coat 28 Set<br>மேற்காணும் பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்குவதற்கும், அதற்கான செலவு தொகை ரூ.1,30,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | |
| | 838 | **பொருள் எண்-45**<br>இந்நகராட்சி புதிய பேருந்து நிலையம் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களை எளிய முறையில் சுத்தம் செய்ய ”வேக்கம் கிளீனர்” ஒன்று வாங்கிக் கொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.40,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 839 | **பொருள் எண்-46**<br>இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்குச் சொந்தமான இடங்கள் மற்றும் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட புறம்போக்கு நிலங்கள், சாலைகள் மற்றும் தெருக்கள் அதிகமாக உள்ளன. மேற்படி சொத்துக்களுக்கு பத்திர நகல் மட்டுமே உள்ளது. உரிய நில அளவை ஆவணங்கள் மற்றும் புலப்பட நகல்கள் எதுவும் இல்லை.<br>இந்நிலையில் பொது மக்கள் சொத்துக்களுக்கும், நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கும் பாது காப்பற்ற சூழ்நிலை உருவாக வாய்ப்புள்ளது. எனவே இதனைத் தவிர்க்கும் பொருட்டு அவரவர் சொத்துக்களுக்குரிய பட்டா நகல் மற்றும் நில அளவு, வார்டு எண், பிளாக் எண் அடங்கிய நில அளவை வரைபட நகல் | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | (புலப்பட நகல்) தயார் செய்து வழங்குவதற்கும் நில அளவை செய்யவும் நில அளவையர் பணியிடம் மிகவும் அவசியமாகிறது.<br>எனவே திருச்செந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து நில அளவையர் ஒருவரை பகுதி நேர பணியாளராக நியமனம் செய்யவும், நிலஅளவையர் ஊதியத்தில் மூன்றில் ஒரு பங்கு ஊதியத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | |
| | 840 | **பொருள் எண்-47**<br>இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட நிலங்கள் மற்றும் நகராட்சி பூங்காக்கள் உள்ளன. நகர்ப் பகுதிகளில் பொது மக்கள் போக்குவரத்திற்குப் பயன்படுத்தும் பகுதிகளில் நிறைய முட் புதர்கள் வளர்ந்துள்ளன. இவை பொது மக்களின் பாதுகாப்பிற்கு தடையேற்படுத்தும் வண்ணம் உள்ளது. இவற்றை அகற்றுவதற்கு அவ்வப்போது தனியார் நிறுவனங்கள் மூலம் ஜே.சி.பி பொக்லைன் வாகனம் மற்றும் டோசர் வாகனம் வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்தும் சூழல் உள்ளது.<br>எனவே போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக வளர்ந்துள்ள முட் புதர்களை அவ்வப்போது அகற்றுவதற்கு தனியார் ஜே.சி.பி வாகனத்தினைப் பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 841 | **பொருள் எண்-48**<br>இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான காயல்பட்டிணம் கிராமம் சர்வே எண்.373/பாகம் கோமான் புதுார் பகுதியில், அனுமதி பெற்ற மனைப்பிரிவு ம.பி.வ/ம (திலி) எண்.11/2004 உள்ளது. இம்மனைப் பிரிவில் நகராட்சிக்குப் பொது ஒதுக்கீடாக 18.80சென்ட் நிலம் (762 சதுர மீட்டர்) மற்றும் அதன் சாலைகளும் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பத்திரப் பதிவு எண்கள்.884/19.12.2005 மற்றும் 885/19.12.2005 ஆவணங்கள் மற்றும் மனைப் பிரிவு வரைபடங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>இதே போல் சர்வே எண்.144/2, 144/5 மற்றும் 515/1 போன்ற ஏக்கர் கணக்கிலான இடங்களும் உள்ளன. மேற்படி இடங்களை நகராட்சி உபயோகத்திற்குப் பயன்படுத்தவும், பாதுகாக்கவும் சுற்றுவேலி அமைப்பது அவசியமாகும்.<br>எனவே மேற்படி நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட இடங்களைப் பாகுகாக்க சுற்றி பாதுகாப்பு வேலி அமைப்பதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.10,000,00/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 842 | **பொருள் எண்-49**<br>இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியற்ற மனைப் பிரிவுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களிடமிருந்து தொடர் கடிதங்கள் வந்த வண்ணம் உள்ளது. இந்நகராட்சிப் பகுதிகளில் ஏற்கனவே அனுமதி பெறாத மனைகளில் பெரும்பாலான பகுதிகளில் கட்டிட அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ள நெருக்கடி மிகுந்த கட்டுமானப் | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | பகுதிகளில் (Built up Area) தவிர இதர அனுமதி பெறாத மனைகள் மற்றும் புதிதாக உருவாகும் அனுமதி பெறாத மனைப் பிரிவுகளைத் தடுக்கும் பொருட்டு, பொது மக்களுக்கு விழப்புணர்வு ஏற்படுத்தவும், கடற்கரை கட்டுப்பாட்டுப் பகுதி மனைப்பிரிவு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும் விழிப்புணர்வு பதாகைகள் அமைக்கவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.30,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | |
| | 843 | **பொருள் எண் -50**<br><br>இந்நகராட்சி 2004ம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக பேரூராட்சி நிலையிலிருந்து தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 2010ம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.<br>இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இந்நகராட்சியின் சார்பில் வரவேற்பு மற்றும் வருகைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பதாகைகள் அமைப்பதற்கும், இவ்வகைப் பதாகைகளில் நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளர் ஆகியோரின் பெயர் மற்றும் பதவியுடன் பதாகைகள் அமைத்திடவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதியளிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 844 | **பொருள் எண் -51**<br><br>இந்நகராட்சி தேர்வு நிலை பேரூராட்சியிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் ஆணையாளர், பொறியாளர்,மேலாளர், உதவியாளர், சுகாதார ஆய்வாளர், நகரமைப்பு ஆய்வாளர், மற்றும் பொது பணி மேற்பார்வையாளர் ஆகிய கூடுதல் பணியிடங்களுக்கு அரசின் அனுமதி பெறப்பட்டு பணியாற்றி வருகிறார்கள் மேற்படி பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு போதுமான இருக்கைகள் டேபிள் மற்றும் அலுவலக ஆவணங்களை பாதுகாக்க ஸ்டீல் பீரோ போதுமானதாக இல்லாத காரணத்தினால் கீழ்கண்டவாறு தேவைப்படுகிறது.<br><br>1. ஸ்டீல் பீரோ 6 எண்ணம்<br>2. மரச்சேர் 10 எண்ணம்<br>3. வி.ஐ.பி.டேபிள் 1 எண்ணம்<br>4. ரோலிங் 1 எண்ணம்<br>5. ஸ்டீல் பீரோ -6 அடி 1 எண்ணம்<br><br>மேற்படி பொருட்களை அரசின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருச்செந்தூர் சர்வோதயாவில் விலைப்புள்ளி பெற்று நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.200000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br><br>1. மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2. மேலும் பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் மன்றத்தின் பின்னேற்பு பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 845 | **பொருள் எண் -52**<br><br>இந்நகராட்சி அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 15-ன் செலவு செய்த விபரம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி ஆணையாளர் ஈப்பு வாகனம் TN69U9148 பழுது நீக்கம் செய்த வகைக்கு கோடைகார்ஸ் பிரைவேட் லிட்-க்கு தொகை வழங்கப்பட்டது | ரூ.28720/- | |
| 2 | இந்நகராட்சி அலுவலகத்தில் மக்கள் சாசன பலகை பிரிவு எழுத்தர்கள் மற்றும் அலுவலர்களின் பதவி பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர்கள் மற்றும் ரப்பர் ஸ்டாம்ப் தயார் செய்த வகைக்கு திரு.எஸ்.அறிவுடைநம்பி நகரமைப்பு ஆய்வாளருக்கு வழங்கப்பட்டது | ரூ.3100/- | |
| 3 | TN 69 S0146 பொது சுகாதார பிரிவு வாகனம் கார்கோ மினிலாரியில் பழுது நீக்கம் செய்த வகைக்கு | ரூ.3275/- | |
| 4 | TN 60 6922 கார்கோ மினிலாரி பழுது நீக்கப் பணி செய்த வகைக்கு | ரூ.2800/- | |

| | | | |
|---|---|---|---|
| 5 | JCB மூலம் நகராட்சி வளாக உரக்கிடங்கினை சுத்தம் செய்த வகைக்கு | ரூ.25900/- | |
| 6 | நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தாள் விளம்பரங்களை கிழித்த வகைக்கு | ரூ.3890/- | |
| 7 | இவ்வலுவலக A1 பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவில் கணிணி பொருத்தியது மற்றும் இண்டர் நெட் இணைப்பு வழங்க மோடம் வாங்கிய வகைக்கு திரு.சி.பொன்வேல்ராஜ் சுகாதார ஆய்வாளர்க்கு வழங்கப்படுகிறது | ரூ.2390/- | |
| 8 | பொதுசுகாதார பிரிவு வாகனம் TN69 2821 டம்பர் பிளேசர் லாரியில் பழுது நீக்கம் செய்த வகைக்கு | ரூ.12000/- | |
| 9 | நகராட்சி அலுவலக கழிப்பறை நச்சு தொட்டி புதிய பேருந்து நிலைய நச்சு தொட்டிகளை சுத்தம் செய்த வகைக்கு | ரூ.13750/- | |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>846</td><td>

**பொருள் எண்-53**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணி புரிந்து வந்த திரு.பெருமாள் என்பவர் பணியிடை காலத்தில் கடந்த 05.01.2014 தேதியன்று உடல்நல குறைவு காரணமாக காலமானதால் மேற்படி பணியிடம் 06.01.2014 தேதி முதல் காலியாக இருந்து வருகிறது

6 மாதங்களுக்கு காலியாக இருந்து வரும் காலிப்ப பணியிடத்தினை சம்மந்தப்பட்ட நகராட்சியின் செலவினம் 49 சதவிகிதத்திற்கு மிகால் இருந்தால் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் பெற்று அதனடிப்படையில் பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளலாம் என நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியின் செலவினம் 49 சதவிகிதத்திற்கு மிகாமல் உள்ளது. எனவே மேற்படி துப்புரவு பணியாளர் காலிப்பணியிடத்தினை பூர்த்தி செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதியளிக்கலாம்

</td><td>மன்றம் அனுமதி வழங்குகிறது</td></tr>
<tr><td></td><td>847</td><td>

**பொருள் எண்**-54

காயல்பட்டணம் நகராட்சியில் வறட்சி நிவாரணம் 2014-ல் காயல்பட்டணம் குடிநீர் மேம்பாட்டுத்திட்டப்பணிகளின் தலைமை நீரேற்றும் நிலையம் அமைந்துள்ள பொன்னன்குறிச்சியில் தாமிரபரணி ஆற்றில் ஒரு எண்ணம் நீர்உறிஞ்சும் கிணறு அமைப்பதற்கு 30.05.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கிழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th><th>ஒப்பந்தக்காரர் பெயர்/முகவரி</th><th>ஒப்பந்த வகை மதிப்பீடு ரேட்டிற்கு</th></tr>
<tr><td>1</td><td>காயல்பட்டணம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டத்திட்டத்திற்கான தலைமை நீரேற்றும் நிலையம்</td><td>18.00</td><td>திரு.ஆர்.தலவாணி முத்து, பூந்தோட்டம்</td><td>4.95% கூடுதல்</td></tr>
</table>

</td><td>மன்றம் அனுமதி வழங்குகிறது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அமைந்துள்ள பொன்னன் குறிச்சியில் தாமிரபரணி ஆற்றுக்குள் 4.50மீட்டர் விட்டமும் 9.00மீட்டர் ஆழமும் கொண்ட நீர் உறிஞ்சும் கிணறு ஒரு எண்ணம் அமைத்தல்<br><br>மேற்கண்ட பணிக்கு ஒற்றை ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேலும் இப்பணியானது வறட்சி நிவாரணதிட்டப்பணியாக இருப்பதாலும் இது இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி அழைப்பாக இருப்பதாலும் பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்ற ஒற்றை ஒப்பந்தப்புள்ளியினை (4.95% கூடுதல்) அங்கிகரிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | 848 | **பொருள் எண்:**55<br>காயல்பட்டணம் நகராட்சியில் பப்பரப்பள்ளியில் நவீன இறைச்சிக்கூடம் கட்டப்பட்டுள்ள வளாகத்தில் தனியாக சுகாதாரமான முறையில் மாடுகள் வெட்டுவதற்கு தனியாக கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 6.00 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 849 | **பொருள் எண்-56**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை மேம்பாடு செய்யவும் பொதுமக்களுக்கு மழைநீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த நகராட்சியின் மூலம் பேரணிகள் நடத்திடவும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்படி பணிகள் செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.40000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதி வழங்கலாம | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 850 | **பொருள் எண் 57**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 17 வது வார்டுக்குட்பட்ட குத்துக்கல் தெருவில் தாழ்வான பகுதியில் மழைநீர் அதிகம் தேங்குவதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால் மழைநீர் தேங்கும் பகுதியான சுமார் 100 மீட்டர் நீளத்திற்கு மட்டும் சிமெண்ட் சாலையினை உயர்த்தி அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.75 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 851 | **பொருள் எண்.58**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கற்புடையார் பள்ளி வட்டம் பகுதியில் என்.எப்.டி.பி திட்டத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பில் மீன்களை பதப்படுத்தும் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு மீன்வளத்துறையிடம் நிதி ஒதுக்கீடு கேட்டு கருத்துரு சமர்பிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 852 | **பொருள் எண்.59**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கடையக்குடி பகுதியில் என்.எப்.டி.பி திட்டத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பில் மீன்களை பதப்படுத்தும் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு மீன்வளத்துறையிடம் நிதி ஒதுக்கீடு கேட்டு கருத்துரு சமர்பிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 853 | **பொருள் எண்.60**<br>காயல்பட்டணம் நகராட்சியில் என்.எப்.டி.பி திட்டத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பில் நகராட்சிக்கு சொந்தமான மீன் சந்தை பகுதிக்கு புதியதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு மீன் வளத்துறையிடம் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு கருத்துரு சமர்பிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 854 | **பொருள் எண் 61**<br>நகராட்சி 9 வது வார்டில் தண்ணிர் திறக்கும் தொட் (வால்வு தொட்டி) மூடி போடப்படாமல் உள்ளவைகளுக்கு மூடி போட்டு தண்ணீர் திறக்கும் நேரங்களில் மட்டும் வால்வு திறக்க மூடி திறக்கப்பட்டு பின் உடன் தொட்டி மூடவும் அதன் மூலம் குப்பைகள் சேராவண்ணம் செயல்படுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு<br><br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 855 | **பொருள் எண் 62**<br><br>காயல்பட்டணம் நகராட்சி நவீன ஆடு மாடு அறுக்கும் தொட்டி இடத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுப்பதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 லட்சத்திற்கு நகர்மன்ற அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br><br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 856 | **பொருள் எண் 63**<br><br>நகராட்சி 6 வது வார்டில் 1 அம்பலமரைக்காயர் கி.மு.கச்சேரி தெருவின் ஜன்சன் பகுதி 2 அம்பல மரைக்காயர் தெருவில் வட பகுதியில் குத்பா பள்ளியின் அருகாமையில் முச்சந்தி 3 சித்தன் தெரு கீழ நெய்னார் தெரு சந்திப்பு பகுதி 4 கீழ நெய்னார் தெரு ஹாஜியப்பா தைக்கா பகுதி அருகில் உள்ள சந்திப்பு 5 சித்தன் தெரு சி.கஸ்டம்ஸ் தெரு முனை பகுதி மற்றும் ஆசாத் தெரு ஆகிய ஆறு பகுதிகளில் உயர் மின் கோபுர விளக்கு (Highmass light) அமைத்திட மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலக குறிப்பு<br><br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்குகிறது |